The Times of India
Dated: 15.11.2024

# Cong petitions EC over PM, Shah slanderous talks

**New Delhi:** Accusing Prime Minister Narendra Modi and home minister Amit Shah of making divisive and slanderous statements in election rallies, Congress on Thursday petitioned the Election Commission seeking action against the BJP leaders for violations of election conduct rules.

Congress general secretary Jairam Ramesh wrote to the ECI, giving details of the speeches delivered by Modi and Shah in Maharashtra and Jharkhand. He said Modi in his speeches accused Congress leaders Jawaharlal Nehru, Indira Gandhi and Rajiv Gandhi of being opposed to SC, ST and OBCs, and repeated the unfounded charges in various rallies. He said the claims were clearly designed to promote religious and caste animosity. He made similar charges against Shah. TNN

The Hindu (English)
Dated: 15.11.2024

# Ban Modi, Shah from campaign, says Cong.

The Hindu Bureau
NEW DELHI

The Congress has lodged a complaint with the Election Commission of India (EC) against Prime Minister Narendra Modi and Home Minister Amit Shah and has demanded a ban on the two leaders for the remainder of the election campaign in Maharashtra and Jharkhand.

Congress leader Jairam Ramesh, who filed the complaint, termed the BJP's campaign "divisive, false, and malicious".

The complaint accused Mr. Modi and Mr. Shah of levelling "false allegations" against the Congress's present and past leadership, accusing them of being opposed to the interests of SCs, STs and OBCs.

The Congress has demanded that criminal cases be registered against "individuals involved in the BJP's blatantly violative electoral campaign".

The party said that both Mr. Modi and Mr. Shah have falsely blamed the Congress of "actively promoting infighting" in these three communities. The party has submitted transcripts of all the "objectionable" comments to the panel.

"To allow Narendra Modi and the BJP to continue to make these elections about caste is ultimately a disservice to the electorate. Real issues such as social economic justice, developments in public infrastructure and job creation have been relegated to the background," the complaint said.

The Hindu (Tamil)

Dated: 15.11.2024

வாக்காளர் பட்டியல் தயாரிப்பின்போது

# இறந்தவர்கள், இடம் மாறியவர்கள் பெயர்களை நீக்கக்கோரி வழக்கு

## தேர்தல் ஆணையம் பதிலளிக்க உத்தரவு

● சென்னை

ஊரக உள்ளாட்சி தேர்தலுக்கான வாக்காளர் பட்டியல் தயாரிப் பின்போது இறந்தவர்கள் மற்றும் இடம் மாறியவர்களின் பெயர் களை நீக்கக்கோரி தொடரப் பட்ட வழக்கில் இந்திய தேர்தல் ஆணையம், மாநில தேர்தல் ஆணையம் பதிலளிக்க உயர் நீதிமன்றம் உத்தரவிட்டது.

சென்னை உயர் நீதிமன்றத் தில் மதுரை வீரன் என்பவர் தாக்கல் செய்திருந்த மனுவில், 'தமிழகத்தில் ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு 2019-ல் தேர்தல் நடைபெற்றது. அந்த தேர்தலில் வெற்றி பெற்றவர் களின் பதவிக்காலம் அடுத்த மாதம் டிசம்பருடன் முடிவடை கிறது. இதனால் ஊரக உள் ளாட்சி தேர்தல் பணிகளை மேற் கொள்ள மாநில தேர்தல் ஆணை யம் நடவடிக்கை எடுத்து வரு கிறது. இதற்காக வாக்காளர் பட்டியல் தயாரிப்பு பணிகளுக் காக இந்திய தேர்தல் ஆணையத் திடம் பட்டியல் கோரியுள்ளது. ஆனால் எம்.பி., எம்எல்ஏ-க்களை தேர்வு செய்வதற்காக இந்திய தேர்தல் ஆணையம் தயாரித்த வாக்காளர் பட்டியலிலேயே பல் வேறு குளறுபடிகள் இருந்தன. எனவே கள்ள ஓட்டுக்களை தவிர்க்கும் வகையில், ஊரக உள்ளாட்சி தேர்தலுக்கான வாக்காளர் பட்டியல் தயாரிப் பின்போது இறந்தவர்கள் மற்றும் இடம் மாறிச்சென்றவர்களின் பெயர்களை நீக்க மாநில தேர்தல் ஆணையத்துக்கு உத்தரவிட வேண்டும்' எனக் கோரியிருந்தார்.

இந்த வழக்கு தலைமை நீதிபதி கே.ஆர்.ஸ்ரீராம், நீதிபதி செந்தில்குமார் ராமமூர்த்தி ஆகியோர் அடங்கிய அமர்வில் நேற்று விசாரணைக்கு வந்தது. அப்போது நீதிபதிகள், இந்தவழக் கில் இந்திய தேர்தல் ஆணை யம் மற்றும் மாநில தேர்தல் ஆணையம் பதிலளிக்க உத்தர விட்டு விசாரணையை வரும் நவ.28-க்கு தள்ளிவைத்தனர்.

The Hindu (Tamil)
Dated: 15-11-2024

# வாக்காளர் பட்டியல் திருத்தம் தொடர்பான ஆலோசனை கூட்டம்

● காஞ்சிபுரம்

காஞ்சிபுரத்தில் வாக்காளர் பட்டியல் திருத்தம் தொடர்பாக அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளுடனான ஆலோசனைக் கூட்டம் நேற்று நடைபெற்றது.

இந்தக் கூட்டத்துக்கு, வேளாண் வணிகத் துறை முதன்மைச் செயலர் ஜி.பிரகாஷ் தலைமை தாங்கினார். இம்மாவட்டத்தில் உள்ள அனைத்து வாக்குச் சாவடி மையங்களிலும் வாக்காளர் பட்டியல் திருத்தம் தொடர்பான சிறப்பு முகாம்கள் நவம்பர் 16, 17, 23, 24 ஆகிய நாட்களில் காலை 9 மணிமுதல் மாலை 5 மணிவரை நடைபெறும்.

இந்த முகாம்களில் வரைவு வாக்காளர் பட்டியல் மக்கள் பார்வைக்கு வைக்கப்படும். அதில் திருத்தம் செய்து கொள்ளலாம் என்று முதன்மைச் செயலர் தெரிவித்தார்.

Dinamalar
Dated: 15-11-2024

# தமிழகம் முழுதும் நாளை வாக்காளர் சிறப்பு முகாம்

**சென்னை, நவ. 15–**



தமிழகம் முழுதும், நாளை மற்றும் நாளை மறு தினம், வாக்காளர் சிறப்பு முகாம் நடக்க உள்ளது.

தமிழகத்தில் இறுதி வாக்காளர் பட்டியல், ஒவ்வொரு ஆண்டும் ஜனவரி, 5ம் தேதி, தேர்தல் கமிஷனால் வெளியிடப்படும். அதற்கு முன்னதாக, ஒரு மாதம் வாக்காளர் பட்டியல் திருத்தப் பணி நடக்கும்.

அதன்படி இம்மாதம் முழுதும் வாக்காளர் பட்டியல் திருத்தப் பணி நடக்க உள்ளது. வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்க்க, நீக்க, திருத்தம் செய்ய, முகவரி மாற்ற விண்ணப்பிக்கலாம்.

இதற்காக நாளை மற்றும் நாளை மறு தினம், தமிழகத்தில் உள்ள அனைத்து ஓட்டுச் சாவடிகளிலும், சிறப்பு முகாம் நடக்க உள்ளது. வாக்காளர்கள் அங்கு சென்று, பெயர் சேர்க்க, நீக்க, திருத்தம் செய்ய, முகவரி மாற்ற விண்ணப்பிக்கலாம்.

இதுதவிர, https://voters.eci.gov.in இணையதளத்திலும், VOTER HELP LINE என்ற மொபைல் போன் செயலி வழியாகவும் விண்ணப்பிக்கலாம்.

Daily Thanthi

Dated: 15-11-2024

# வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்க்க சிறப்பு முகாம்

## நாளை தொடங்கி 4 நாட்கள் நடக்கிறது

சென்னை, நவ.15-

வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்க்க சிறப்பு முகாம் நாளை (சனிக்கிழமை) தொடங்கி 4 நாட்கள் நடக்கிறது.

### வாக்காளர் பட்டியலில் திருத்தம்

இதுதொடர்பாக பெருநகர சென்னை மாநகராட்சி வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:-

இந்திய தேர்தல் ஆணையத்தின் உத்தரவின்படி, 1.1.2025-ம் தேதியை தகுதி ஏற்படுத்தும் நாளாக கொண்டு வாக்காளர் பட்டியலில் திருத்தம் மேற்கொள்ளும் வகையில் சென்னை மாவட்டத்தில் உள்ள 16 சட்டமன்ற தொகுதிகளுக்கான வரைவு வாக்காளர் பட்டியல் 29.10.2024 அன்று வெளியிடப்பட்டது.

இந்த வரைவு வாக்காளர் பட்டியல் சென்னை மாநகராட்சி மண்டல அலுவலகங்கள் 4, 5, 6, 8, 9, 10, 13 மற்றும் அனைத்து வாக்குச்சாவடி மையங்களிலும் பொதுமக்களின் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளது. பொதுமக்கள் தங்களது பெயர் மற்றும் குடும்பத்தினர் பெயர் விவரங்கள் வரைவு வாக்காளர் பட்டியலில் இடம் பெற்றுள்ளனவா? என்பதை சரிபார்த்து கொள்ள கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

### சிறப்பு முகாம்

வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்த்தல், நீக்குதல், முகவரி மாற்றம் செய்தல் போன்றவற்றை வாக்காளர்கள் மேற்கொள்வதற்கு வசதியாக நாளை (சனிக்கிழமை) மற்றும் 17-ந்தேதி (ஞாயிற்றுக்கிழமை) மற்றும் 23, 24 ஆகிய தேதிகளில் சென்னை மாவட்டத்திற்கு உட்பட்ட 947 வாக்குச்சாவடி மையங்களில் சிறப்பு முகாம்கள் நடத்தப்பட உள்ளன.

வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்க்கப்படாமல் உள்ளவர்கள் மற்றும் 1.1.2025 அன்று 18 வயது பூர்த்தி அடைபவர்கள் (1.1.2007-ந் தேதிக்கு முன்பாக பிறந்தவர்கள் மற்றும் 17 வயது நிரம்பி 18 வயது பூர்த்தி அடையும் நிலையில் உள்ளவர்களும்) படிவம்-6 மூலம் வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்த்துக்கொள்ளலாம்.

பெயர் நீக்கம் மற்றும் சட்டமன்ற தொகுதிக்குள்ளேயே ஒரு இடத்தில் இருந்து மற்றொரு இடத்திற்கு குடிபெயர்ந்து புதிய வசிப்பிடத்தில் உள்ளவர்கள், மேலும் வேறு தொகுதிக்கு குடிபெயர்ந்தவர்கள் வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்க்க மற்றும் திருத்தங்கள் செய்ய உரிய படிவத்தை பூர்த்தி செய்து அதற்கான ஆதாரத்தை இணைத்து அளிக்க வேண்டும்.

### இணையதளம் மூலம் விண்ணப்பிக்கலாம்

சிறப்பு முகாம் மட்டுமல்லாமல் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டல அலுவலரின் அலுவலகத்தில் 28-ந்தேதி வரை காலத்திற்குள் விண்ணப்பிக்கலாம். மேலும், http://voters.eci.gov.in/ என்ற இணையதளம் மூலமாகவும் பெயர்கள் சேர்க்கவும், நீக்கவும், திருத்தங்களை மேற்கொள்ளவும் விண்ணப்பிக்கலாம்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

Daily Thanthi

Dated: 15.11.2024

### வாக்குச்சாவடியாக பயன்படுத்தப்படும்

# பள்ளி, கல்லூரிகளை தேர்தலுக்குப்பின் சுத்தம் செய்ய நிதி ஒதுக்கக்கோரி வழக்கு

## தேர்தல் ஆணையம் பதில் அளிக்க ஐகோர்ட்டு உத்தரவு

சென்னை, நவ.15-

வாக்குச்சாவடியாக பயன்படுத்தப்பட்ட பள்ளிகள், கல்லூரிகளை தேர்தலுக்குப்பின் சுத்தம் செய்ய நிதி ஒதுக்க வேண்டும் என்று தொடரப்பட்ட வழக்கிற்கு பதில் அளிக்கும்படி இந்திய தேர்தல் ஆணையத்துக்கும், தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையத்துக்கும்சென்னைஐகோர்ட்டு உத்தரவிட்டு உள்ளது.

சென்னை ஐகோர்ட்டில், தூத்துக்குடி மாவட்டம், திருச்செந்தூரைச் சேர்ந்த ராம்குமார் ஆதித்தன் என்பவர் தாக்கல் செய்துள்ள பொதுநல மனுவில் கூறியிருப்பதாவது:-

### தேர்தல்

இந்திய தேர்தல் விதி 31-ன் படியும், தமிழ்நாடு பஞ்சாயத்து தேர்தல் விதி 41-ன்படியும் ஒவ்வொரு வாக்குச்சாவடிகளிலும்போதுமான அளவு வாக்குப்பதிவு எந்திரங்கள் உள்ளிட்டவைகளை வைத்து தேர்தலை நடத்த வேண்டும். வாக்குப்பதிவு நாளின்போது, போட்டியிடும் வேட்பாளர்கள், அவர்களது சின்னங்கள் ஆகியவற்றையும் வாக்காளர்களுக்கு தெரியும் விதமாக வாக்குச்சாவடிகளில் வைத்திருக்க வேண்டும்.

இவைகள் எல்லாம் தேர்தல் நடத்த பயன்படுத்தப்படும் பள்ளிகள், கல்லூரிகளின் சுவர்களில் ஒட்டப்படுகின்றன.

### அழகான ஓவியம்

தமிழ்நாட்டில் தனியார் அமைப்புகள், பெரிய நிறுவனங்கள் மற்றும் பெற்றோர் ஆசிரியர் கழகத்தின் மூலம் பெறப்படும் நன்கொடை மூலம் அரசு பள்ளிகளில் அறிவுப்பூர்வமான ஓவியம் வரைந்து அதன்மூலம் மாணவர்களுக்கு பாடம் நடத்துகின்றனர். இதுபோல அரசு உதவி பெறும் பள்ளிகளிலும், தனியார் பள்ளிகளும் சுவரில் படம் வரைந்து கல்வி கற்பிக்கின்றன.

ஆனால், தேர்தலின்போது பழங்கால பழக்கவழக்கத்தை பின்பற்றும் அதிகாரிகள், வேட்பாளர்களின் பெயர், சின்னம் ஆகியவற்றை கொண்ட பட்டியலை, பள்ளிக்கூடங்களில் அழகாக வரையப்பட்டுள்ள ஓவியங்கள் மீது ஒட்டிவிடுகின்றனர்.

### குப்பைகள்

அதுமட்டுமல்ல, வாக்குப்பதிவு நாளில் உணவு சாப்பிட்ட பொட்டலங்கள், காபி குடித்த பிளாஸ்டிக் கப்புகள் உள்ளிட்டவைகளை பள்ளிக்கூட வளாகத்தில் போட்டு சென்று விடுகின்றனர். இதனால், வாக்குப்பதிவு நடந்த பள்ளி, கல்லூரிகளில் குப்பைகள் குவிந்து, துர்நாற்றம் வீசுகின்றன.

தேர்தல் முடிந்த பிறகு பள்ளிக்கூடத்துக்கு வரும் மாணவர்களையும், ஆசிரியர்களையும் இந்த துர்நாற்றம் வீசும் குப்பைகள் முகம் சுளிக்க வைக்கின்றன. தேர்தலுக்காக பள்ளி, கல்லூரிகளை பயன்படுத்தும் அதிகாரிகள், தேர்தல் முடிந்த பின்னர் அங்கு கொட்டிக்கிடக்கும் குப்பைகளை அகற்ற எந்த நடவடிக்கையும் எடுப்பது இல்லை.

### ரூ.650 மட்டும்

இதுகுறித்து தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் பெறப்பட்ட விளக்கத்தின் படி கல்வி நிலையங்களில் ஒரு வாக்குசாவடி ஏற்படுத்த ரூ.650 மட்டும் வழங்கப்படுகின்றன. தேர்தல் முடிந்தபின் வாக்குசாவடிகளை சுத்தம் செய்ய நிதி எதுவும் ஒதுக்குவது இல்லை என்று தெரிகிறது.

எனவே, தேர்தலின்போது, பள்ளிகளில் கல்வித்தொடர்பான ஓவியங்கள் மீது வேட்பாளர்கள் விவர பட்டியல்களை ஒட்டக்கூடாது என்றும், தேர்தலுக்குபின் கல்வி நிலையங்களை சுத்தம் செய்ய நிதி ஒதுக்கவேண்டும் என்றும் இந்திய தேர்தல் ஆணையம், மாநில தேர்தல் ஆணையம் ஆகியவைகளுக்கு உத்தரவிட வேண்டும்.

இவ்வாறு அதில் கூறப்பட்டு உள்ளது.

### நெறிமுறைகள்

இந்த வழக்கை விசாரித்த தலைமை நீதிபதி கே.ஆர். ஸ்ரீராம், நீதிபதி செந்தில்குமார் ராமமூர்த்தி ஆகியோர், "வாக்குச்சாவடிகளாக பயன்படுத்தப்படும் பள்ளிகளையும், கல்லூரிகளையும் சுத்தம்செய்துகொடுப்பதற்கு வழிகாட்டி நெறிமுறைகள் ஏதாவது உள்ளதா? என்பது குறித்து வருகிற 12-ந்தேதிக்குள் மாநில தேர்தல் ஆணையம் பதில் அளிக்கவேண்டும்" என்று உத்தரவிட்டனர்.

Daily Thanthi

Dated: 15-11-2024

### தேர்தலின்போது சொத்து விவரங்கள் குறித்து தவறான தகவல்:

# முன்னாள் அமைச்சர் கே.சி.வீரமணி மீது வழக்கு

## 26-ந்தேதி கோர்ட்டில் ஆஜராக உத்தரவு

திருப்பத்தூர், நவ.15-
சட்டப்பேரவை தேர்தலின்போது சொத்து விவரங்களை குறைத்து தவறான தகவல்களை தாக்கல் செய்ததாக எழுந்த புகாரின்பேரில் முன்னாள் அமைச்சர் கே.சி. வீரமணி மீது வழக்கு தொடரப்பட்டுள்ளது. வருகிற 26-ந்தேதி நேரில் ஆஜராக திருப்பத்தூர் கோர்ட்டு உத்தரவிட்டுள்ளது.

### தவறான தகவல்

திருப்பத்தூர் மாவட்டம், ஜோலார்பேட்டை சட்டப்பேரவை தொகுதியில் கடந்த 2021-ம் ஆண்டு நடந்த தேர்தலில் அ.தி.மு.க. சார்பில் மாவட்ட செயலாளரும், முன்னாள் அமைச்சருமான கே.சி. வீரமணி 3-வது முறையாக போட்டியிட்டு தோல்வியடைந்தார். சட்டப்பேரவை தேர்தலில் போட்டியிடுவதற்காக தேர்தல் ஆணையத்தில் அவர் தாக்கல் செய்த பிரமாண பத்திரத்தில் சொத்து விவரங்களை குறைத்து, தவறான தகவல்களை கொடுத்திருப்பதாக சர்ச்சை எழுந்தது.

இதுதொடர்பாக வேலூரைச் சேர்ந்த தொழிலதிபர் ராமமூர்த்தி என்பவர் இந்திய தேர்தல் ஆணையத்தில் புகார் அளித்தார். அதில், தேர்தல் ஆணையத்தில் முன்னாள் அமைச்சர் கே.சி.வீரமணி தன் சொத்துகளை குறைத்து தவறான தகவல்களை அளித்திருப்பதாகவும், அவரது வேட்புமனுவை தள்ளுபடி செய்ய வேண்டும் எனவும் கூறியிருந்தார்.

### வழக்கு

இதையடுத்து, முன்னாள் அமைச்சர் கே.சி.வீரமணி மீதான புகாரின் மீது நடவடிக்கை எடுக்க தேர்தல் ஆணையத்துக்கு உத்தரவிட வேண்டும் என சென்னை ஐகோர்ட்டிலும் தொழிலதிபர் ராமமூர்த்தி வழக்கு தொடர்ந்தார். ராமமூர்த்தி அளித்த புகாரை விசாரித்து கே.சி.வீரமணி மீது உரிய நடவடிக்கைஎடுக்கதலைமை தேர்தல் அதிகாரிக்கு கோர்ட்டு உத்தரவிட்டிருந்தது.

கோர்ட்டு உத்தரவின்படி தேர்தல் ஆணையம் நடத்திய ஆய்வில் கே.சி.வீரமணி, பிரமாணப் பத்திரத்தில் சொத்துகளை குறைத்து தவறான தகவல்களை தாக்கல் செய்தது கண்டுபிடிக்கப்பட்டது. இதைத்தொடர்ந்து திருப்பத்தூர் கோர்ட்டில் தேர்தல் ஆணையத்தின் மூலம் ஜோலார்பேட்டை சட்டப்பேரவை தேர்தல் அலுவலர் பல்வேறு கோப்புகளை அளித்தார்.

அதன் அடிப்படையில் திருப்பத்தூர் முதலாவது மாஜிஸ்திரேட்டு கோர்ட்டு பரிசீலனை செய்து, பி.என்.எஸ்.எஸ். பிரிவு 223-ன் கீழ் வழக்கு தொடரப்பட்டது. இந்த வழக்கில் வருகிற 26-ந்தேதி முன்னாள் அமைச்சர் கே.சி.வீரமணி நேரில் ஆஜராக வேண்டும் என திருப்பத்தூர் முதலாவது மாஜிஸ்திரேட்டு கோர்ட்டு உத்தரவிட்டுள்ளது.

Dinamalar, Dated: 15-11-2024

# ஓட்டு சாவடிகளாக பயன்படுத்திய பள்ளிகளை சுத்தம் செய்வது எப்படி?

## தேர்தல் கமிஷனிடம் விளக்கம் கேட்கும் ஐகோர்ட்

சென்னை, நவ. 15– தேர்தல் முடிந்த பின், ஓட்டுச் சாவடிகளாக பயன்படுத்தப்பட்ட பள்ளிகளை சுத்தப்படுத்துவது தொடர்பாக, ஏதாவது விதிமுறைகள் உள்ளதா என்பதற்கு, தேர்தல் ஆணையம் விளக்கம் அளிக்க சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

திருச்செந்துாரைச் சேர்ந்த வழக்கறிஞர் ராம்குமார் ஆதித்தன் என்பவர் தாக்கல் செய்த மனு:

லோக்சபா, சட்டசபை, உள்ளாட்சி அமைப்புகளுக்கான தேர்தலின் போது, ஓட்டுச் சாவடிகளில் வாக்காளர்களின் தெரு, பகுதி, வேட்பாளர்கள் விபரங்களை வைக்க வேண்டும்.


ஓட்டுச் சாவடிக்குள், வாக்காளர்கள் அறிந்து கொள்ளும் வகையில், ஓட்டுப்பதிவு செய்யும் இடம், அடையாள மை வைக்கும் இடம் குறித்த அறிவிப்பு வைக்க வேண்டும். இந்த அறிவிப்புகளை, பேப்பர் மற்றும் அட்டையில் தயார் செய்து சுவரில் ஒட்டுகின்றனர்.

### சுவர்களுக்கு பாதிப்பு

பெரும்பாலும் அரசு பள்ளிகள் மற்றும் அங்கன்வாடிகள் தான், ஓட்டுச் சாவடிகளாக பயன்படுத்தப்படுகின்றன. இதனால், பள்ளிகளின் சுவர்களுக்கு பாதிப்பு ஏற்படுகிறது.

மாணவர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் விதமாக தேசத் தலைவர்கள், சுதந்திர போராட்ட வீரர்களின் படங்கள், பெயர்கள், சுற்றுச்சூழல் குறித்த படங்கள், செய்திகள், பள்ளிகளில் பல வர்ணங்களில் தீட்டப்படுகின்றன.

ஓட்டுச் சாவடிகளாக பள்ளிகளை பயன்படுத்தும் போது, ஏற்கனவே உள்ள விழிப்புணர்வு படங்கள், செய்திகளுக்கு பாதிப்பு ஏற்படுகிறது. தேர்தலுக்கு தயார் செய்ய, ஒரு ஓட்டுச் சாவடிக்கு 650 ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படுகிறது. தேர்தல் முடிந்த பின், ஓட்டுச் சாவடியை சுத்தம் செய்ய, பணம் ஒதுக்கப்படுவது இல்லை.



எனவே, தேர்தல் தொடர்பான அறிவிப்புகளை, ஓட்டுச் சாவடிகளில் ஒட்டாமல் இருக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். தேர்தலுக்குப் பின், ஓட்டுச் சாவடிகளை சுத்தப்படுத்த நிதி ஒதுக்க உத்தரவிட வேண்டும்.

இவ்வாறு மனுவில் கூறப்பட்டுள்ளது.

மனு, தலைமை நீதிபதி கே.ஆர்.ஸ்ரீராம், நீதிபதி செந்தில்குமார் ராமமூர்த்தி அடங்கிய, முதல் பெஞ்ச் முன், விசாரணைக்கு வந்தது.

தேர்தலுக்கு பின் ஓட்டுச் சாவடிகளை சுத்தம் செய்து கொடுக்க, விதிமுறைகள் ஏதும் உள்ளதா என்பது குறித்து தேர்தல் ஆணையம் விளக்கம் அளிக்க, முதல் பெஞ்ச் உத்தரவிட்டது. விசாரணையை டிசம்பர் 12க்கு தள்ளி வைத்தது.

### பஞ்சாயத்து தேர்தல்

அ.தி.மு.க., வழக்கறிஞர் அணியின் மாநில துணை செயலரான மதுரைவீரன் தாக்கல் செய்த மனுவில், 'பஞ்சாயத்து தேர்தலுக்கான வாக்காளர் பட்டியலை தயாரிப்பதற்கு, தேர்தல் ஆணையத்திடம் வாக்காளர் பட்டியலை தரும்படி, மாநில தேர்தல் ஆணையம் கோரி உள்ளது. தற்போதைய வாக்காளர் பட்டியலில் இருந்து, இறந்தவர்கள் மற்றும் இடம் மாறியவர்களின் பெயர்களை நீக்க வேண்டும்' என்று கூறப்பட்டுள்ளது.

மனு, தலைமை நீதிபதி அடங்கிய முதல் பெஞ்ச் முன், நேற்று விசாரணைக்கு வந்தது. மனுதாரர் சார்பில், வழக்கறிஞர் நெடுஞ்செழியன் வாதாடினார். மனுவுக்கு பதில் அளிக்க, தேர்தல் ஆணையத்துக்கு உத்தரவிட்டு, விசாரணையை வரும் 28க்கு முதல் பெஞ்ச் தள்ளி வைத்தது.